நடவடிக்கை எடுக்கும். மேலும், பிரிட்டிஷ் உதவித் திட்டத்தின் கீழ் கருத்தடை அறுவை சிகிச்சைக்காக செஞ்சி, அரசினர் மருத்துவ மனையில் ஆறு படுக்கைகள் கொண்ட பகுதி மற்றும் அறுவை மருத்துவ அரங்கம் ஒன்று 96,095 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாளில் தென்னாற்காடு மாவட்ட மருத்துவ அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டு இக்கட்டிடம் அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகிறது.

## சிதம்பரம் பழைய மருத்துவமனைக் கட்டிடம்.

* வினா எண் 175—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சிதம்பரம் நகரில் உள்ள பழைய மருத்துவமனை கட்டிடத்தை சிதம்பரம் நகராட்சி, கல்விக்கூடத்திற்குப் பயன்படுத்தக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :(அ) சிதம்பரம் நகராட்சி பழைய மருத்துவமனைக் கட்டிடத்தையும் மருத்துவர் அலுவலர் குடியிருப்பையும் நகராட்சி அலுவலகமாக பயன்படுத்தக் கேட்டுக் கொண்டுள்ளது. கல்விக்கூடமாக பயன்படுத்தக் கேட்கவில்லை.

(ஆ) சித்தா மற்றும் ஆயுர்வேத மருத்துவப் பிரிவுகளை கொண்ட மருத்துவ மனையை இக்கட்டிடத்தில் துவக்கலாம் என செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சி எல்லையிலுள்ள இந்த மருத்துவ மனை புது மருத்துவமனைக்கு மாற்றிய பிறகு கடந்த ஒன்றரை ஆண்டுகளாகியும் பழைய மருத்துவமனை கவனிக்கப்படாமல், இதிலுள்ள எலக்டிரிக் சாமான்கள் எல்லாம் கடத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக இந்த இடம் சமூக விரோதிகளின் இருப்பிடமாக ஆகிக் கொண்டு வருகிறது. இந்தக் கட்டிடத்தை நகராட்சியின் கீழ் கல்விக்கூடமாக உபயோகித்துக்கொள்ள நகராட்சிக்கு அரசாங்கம் கொடுக்க முன்வருமா என்று கேட்டுக்கொள்வதுடன் இந்த கட்டிடத்தின் இடத்தை குடியிருப்புகளாக மாற்ற வேண்டும் என்று கோரி வேறு இலாக்கா கேட்டு இருப்பதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறதா? அப்படியென்றால் அதன் மீது அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

1979 பிப்ரவரி 24]

[முற்பகல் 10—00]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சிதம்பரம் நகராட்சி பழைய மருத்துவ மனைக் கட்டிடத்தை கல்விச்சாலைக்காகவும் கேட்கவில்லை ; குடியிருப்புக்காகவும் கேட்கவில்லை. அலுவலகத்தை விரிவுபடுத்துவதற்காகக் கேட்டிருக்கிறார்கள். அந்த இடத்தை சித்த மருத்துவப் பிரிவில் ஆயுர்வேத மருத்துவ முறைப்படி பச்சைவாதம், இளம் பிள்ளை வாதம் போன்ற நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கின்ற இடமாக உருவாக்குவது என்ற கருத்தின் அடிப்படையிலே ஒரு சிறப்புப் பிரிவை ஏற்படுத்துவதற்கு அந்தக் கட்டிடத்தை இந்த அரசு பயன்படுத்துகின்ற செயற் குறிப்பு ஆய்விலே இருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், அங்கே புதிய மருத்துவ மனைக்கு அருகாமையில் அதிக இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கே அதை அமைத்து, நகராட்சிக்கு விரிவான இடத்தை அமைத்துக் கொடுக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய மருத்துவப் மனைக்கு பக்கத்தில் நிறைய இடங்கள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார்கள். அங்கேயுள்ள கட்டிடத்தையே பயன்படுத்துவதன் மூலம், புதியதாக ஒரு கட்டிடம் கட்டப் படுவதால் ஏற்படுகின்ற செலவையும் தவிர்த்து, இருக்கின்ற கட்டிடத்தையே மராமத்து செய்து பயன்படுத்தினால், செலவைக் குறைப்பதற்கு ஏதுவாகும். இரண்டாவது, நான் சொன்ன இந்த சித்த மருத்துவ ஆயுர்வேத முறைப்படி பச்சை வாதம், இளம் பிள்ளை வாதம் போன்ற நோயாளிகளைப் பராமரிப்பதற்கு நிறைய இடம் தேவைப்படுகிறது என்பதாலே, அந்த இடம் அதற்கு ஏற்றாற்போல் இருக்கிறது. எனவே, அதைப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்பது இப்போது ஆய்வில் இருந்து வருகிறது.

## தமிழ்நாடு சரிகை நிறுவனம்.

* வினா எண். 176— திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டிலுள்ள சரிகை நிறுவனம் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது ?